இருக்கிற காரணத்தினால், மாண்புமிகு இதய்தெய்வம் அவர்களுடைய பொற்கால ஆட்சியிலே, அந்த மருந்தகத்திலே முறையாக மருந்துகள் விநியோகிக்கப்படுகிறதா, இனிமேலாவது சரிவர ஆயிரக்கணக்கான கால்நடைகளை கொண்டிருக்கிற வெள்ளோட்டாம்பரப்பு பேரூராட்சியினுடைய கால்நடைகள் முறையாக பராமரிக்கப்படுமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. தே. ஜனார்தனன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, 1—9—1989-லிருந்து செயல்பட்டு வருகிறது. இப்பொழுது மாண்புமிகு உறுப்பினர் கூறிய குற்றச்சாட்டுகளைப் பரிசீலித்து அப்படிக் குறைகள் இருக்குமானால் களைய ஏற்பாடு செய்யப்படும்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 90, திரு. கே. கந்தசாமி, மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர்.

90—

உணவு வகைகளுக்கு விதிக்கும் விற்பனை வரியை நீக்குதல்.

* 11557—திரு. கே. கந்தசாமி :

மாண்புமிகு வணிக வரிகள் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) உணவு விடுதிகளில் விற்கப்படும் உணவு வகைகளுக்கு விதிக்கும் 5 சதவிகித விற்பனை வரியை நீக்க அரசு முன் வருமா ?

(ஆ) ஆம் எனில், விவரம் என்ன ?

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி, வணிக வரிகள் துறை அமைச்சர் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) மற்றும் (ஆ): உணவுப் பண்டங்களுக்கு தற்போது இருக்கும் 5 சதவீத விற்பனை வரியை குறைக்கும் உத்தேசம் அரசுக்கு தற்போது இல்லை. அதனால் மேற்கொண்டு விவரம் ஏதும் இல்லை.

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஏற்கனவே ஓட்டல் பண்டங்களின் விலை கடுமையாக உயர்ந்திருக்கிறது. சாதாரண இட்லி விலை 1.50 என்ற அளவிற்கு விற்கிறது. சாதாரண மக்கள், ஓட்டல் பண்டங்களை

1993 டிசம்பர் 30]

ஓட்டல்களில் சாப்பிடுவதற்கு அஞ்ச வேண்டிய சூழ்நிலை இருக்கிறது. இந்தச் சூழ்நிலையில் அவர்களுக்கு விற்பனை வரி விதிப்பது மேலும் அவர்களுக்கு கஷ்டத்தைக் கொடுப்பது போலாகும். எனவே, அரசு பரிசீலனை செய்து அந்த விற்பனை வரியை ரத்து செய்ய முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இதர வணிகங்களுக்கு ரூபாய் 1 இலட்சம் வரை வரி விதிவிலக்கு அளிக்கப்பட்டுள்ளது. உணவுப் பண்டங்களைப் பொறுத்தமட்டில் 3 இலட்சம் ரூபாய் வரை வணிகம் நடைபெற்றால் அதற்கு வரி விலக்கு தற்போது இருந்து கொண்டிருக்கிறது. ஆகவே, சாதாரண மக்கள் சிறிய ஓட்டல்களில் சென்று உணவு அருந்துவார்களேயானால் அவர்களுக்கு வரி விதிப்பு தற்போது இல்லை என்பதைத் தெளிவுபடுத்துகிறேன்.

திரு. கே. கந்தசாமி : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஓட்டல் பண்டங்களுக்கு விற்பனை வரி விதித்து, அந்த விற்பனை வரியை அரசுக்கு, ஓட்டல் உரிமையாளர்களால் செலுத்தாமல் இருப்பதற்கு வாய்ப்பு இருக்கிறது. எனவே, பொது மக்கள் சாப்பிடுகின்றபோது வரி விதிக்காமல், அந்த ஓட்டல்களுக்கு வருடத்திற்கு இவ்வளவு என்று வரி விதிக்கப்படுமா என அறிய விரும்புகிறேன்.

முற்பகல் 10–40

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இப்போதுள்ள வரி விதிப்பு முறையில் ஆண்டுக்கு உத்தேசமாக 25 கோடி ரூபாய் வருமானம் வந்து கொண்டிருக்கிறது. இந்த வருமான இழப்பு ஏற்படாத வகையில் மாற்றுமுறை ஒன்றைத் தெரிவிப்பார்களானால், அதை ஒரு கோரிக்கையாக முறையாக வைப்பார்களானால் அரசு பரிசீலிக்கும் என்பதைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

திரு. ஜெ. பாலகங்காதரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அமைச்சர் அவர்கள் தன்னுடைய பதிலில் 3 இலட்சம் ரூபாய் வரையில் வரி விலக்கு அளித்திருப்பதாகத் தெரிவித்திருக்கிறார்கள். 3 இலட்சம் ரூபாய் என்பது, ஒரு ஓட்டலில் தினம் 1,000 ரூபாய்க்கு விற்பனை நடந்தாலும் ஆண்டுக்கு 3 இலட்சம் ரூபாய் வந்துவிடும். சாதாரணமாக ஒரு சிறிய ஓட்டலில் கூட, விலைவாசி அதிகமாக இருப்பதால், தினம் 2,000 ரூபாய், 3,000 ரூபாய்க்கு விற்பனை ஆகிக் கொண்டிருக்கிறது. எனவே, இட்லி விலை 2 ரூபாய் என்ற அளவுக்கு வந்து கொண்டிருக்கிற காலகட்டத்தில் மேலும் உச்சவரம்பைக் கூட்டலாமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. வ. சத்தியமூர்த்தி: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்போது அப்படிப்பட்ட ஒரு செயற் குறிப்பு அரசிடம் இல்லை என்று தெரிவித்துக் கொள்கிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : வினா எண் 91, திரு. கே. ஏ. மனோகரன், மாண்புமிகு தொழில் துறை அமைச்சர்.

91—

ஓசூர் சிப்காட்-II தொழிற்சாலைகள் துவங்க மத்திய, மாநில அரசு உதவிகள்.

*16975—திரு. கே. ஏ. மனோகரன் :

மாண்புமிகு தொழில் துறை அமைச்சர் கீழ்க்காணும் வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) ஓசூர் சிப்காட்—II திட்டப் பகுதியில் எவ்வளவு தொழிற்சாலைகளுக்கான இடம் ஒதுக்கப்பட்டுள்ளது?

(ஆ) தொழிற்சாலைகள் துவங்க மத்திய, மாநில அரசுகள் வழங்கும் முதலீட்டு உதவிகள் எவ்வளவு?

மாண்புமிகு திரு. ம. சின்னசாமி, தொழில் துறை அமைச்சர்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே,

(அ) ஓசூர் சிப்காட் பகுதி 2 திட்டத்திற்கு எடுக்கப்பட்ட 458 ஏக்கர் நிலத்தில் தொழிற்சாலைகளுக்கென 353 ஏக்கர் நிலம் ஒதுக்கீடு செய்ய முடிவு செய்யப்பட்டு அதில் இதுவரை 27 தொழில் பிரிவுகளுக்கு 282 ஏக்கர் நிலம் வழங்கப்பட்டுள்ளது.

(ஆ) சிறு தொழில்களுக்கு ரூ. 90 இலட்சம் வரை தமிழ் நாடு தொழில் முதலீட்டுக் கழகத்தின் மூலமாகவும், நடுத்தர மற்றும் பெரிய தொழில்களுக்கு ரூ. 150 இலட்சம் வரை சிப்காட் மூலமாகவும் அரசு தவணைக் கடன் வழங்குகிறது. பின்தங்கிய வட்டங்களில் உள்ள சிப்காட் தொழில் வளாகங்களில் துவங்கும் தொழிற்சாலைகளுக்கு அசையா சொத்துக்களின் முதலீட்டில் 15 சதவீதம் அல்லது அதிக பட்சமாக ரூ. 15 இலட்சம் வரை மாநில அரசால் மானியம் வழங்கப்படுகிறது. விற்பனை வரி செலுத்துவது 9 ஆண்டுகள் வரை ஒத்தி வைக்கப்படுகிறது. இதில் மத்திய அரசு முதலீட்டு உதவி ஏதுமில்லை.

திரு. கே. ஏ. மனோகரன்: மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தற்சமயம் ஓசூர் சிப்காட் பகுதி—2 திட்டத்தில் பல தொழிற்சாலைகளுக்கு நிலம் ஒதுக்கீடு செய்யப்பட்டு, தொழிற்சாலைகள் அமைக்கப்பட்டுள்ளன. மீண்டும் அங்கே தொழிற்சாலைகள் அமைக்க, அதிலே எக்ஸ்டென்ஷன் செய்வதற்கு வாய்ப்பு இருக்கிறதா என்பதை அறிய விரும்புகிறேன்.